**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**
**C021 இலக்கணம் – 1 (எழுத்து)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. இலக்கணம் எத்தனை வகைப்படும்?
2. தொகை வேற்றுமைச் சொற்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. தொல்காப்பியத்தின் இயல்கள் எத்தனை?
4. புறப்பொருள் வெண்பா மாலையின் ஆசிரியர் யார்?
5. முதற்பொருள் என்பது யாது?
6. உயிர் குறில் எழுத்துகள் எவை?
7. பதம் என்றால் என்ன?
8. உவமைத்தொகைக்கு ஏதேனும் ஒரு சான்று தருக.
9. எண்ணுப்பெயர் புணர்ச்சியில் 'ஒன்று' எவ்வாறு திரியும்?
10. 'பூங்கொடி' – புணர்ச்சி விதியை எழுதுக.
11. சுட்டெழுத்துகள் எவை?
12. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எவை?
13. மாத்திரை என்றால் என்ன?
14. அசை எத்தனை வகைப்படும்?
15. நன்னூலின் ஆசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. பெயர்ச்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
2. முதல் எழுத்து என்றால் என்ன? அவை யாவை?
3. பகுபத உறுப்புகள் எவை?
4. 'தமிழ்' எனும் சொல் எவ்வாறு புணரும்?
5. குற்றியலுகரம் என்றால் என்ன?
6. சாரியை என்றால் என்ன?
7. தெரிநிலை வினைமுற்று எனப்படுவது யாது?
8. விகாரப் புணர்ச்சி என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) போலி என்றால் என்ன? அதன் வகைகளை விளக்கி எழுதுக.

   (அல்லது)

   (ஆ) புறத்திணைகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

2. (அ) தொகைநிலைப் புணர்ச்சியைச் சான்றுடன் விளக்குக.

   (அல்லது)

   (ஆ) செய்யுளின் உறுப்புகளை விளக்கி வரைக.

3. (அ) வல்லினம் மிகும் இடங்களைச் சான்றுடன் தருக.

   (அல்லது)

   (ஆ) 'ல'கர 'ள'கர ஈற்றுப் புணர்ச்சியை விளக்கி வரைக.

* * *